1981 பிப்ரவரி 28]

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் அதற்கான பயிற்சி நடை பெறுவது அரசுக்குத் தெரியுமா? அந்தப் பயிற்சி ஒழுங்கான முறையில் நடக்காமல், ஒன்றியங்களிலே சிலரைக் கூப்பிட்டுவிட்டு, தவறான கணக்கைக் காட்டுவது அரசுக் குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு.. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை,

உரங்களில் கலப்படம்.

*வினா எண். 309.—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 24—7—1980 அன்று தென்னாற்காடு மாவட்டம் திருக் கோவிலூரில் ஒரு வீட்டில் உரத்தில் கலப்படம் செய்யும் தொழிற் சாலை நடத்தி வந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவற்கு இடமில்லை.

[முற்பகல் 9.40]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தக் கலப் படம் நடை பெறுகின்றபோது தொழிற்சாலைகள் தண்டனைக்கு உட்படுவது கிடையாது, இந்தப் பொருட்களை பெறக்கூடிய சாதாரண வியாபாரிகள், அதை விற்பனை செய்யக் கூடியவர்கள் தண்டனைக்கு உட்படுகின்றார்கள் என்ற நிலை இருப்பதால், அதை மாற்றியமைப்பதற்குத் தமிழக அரசு முயற்சியை மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கேள்வி திருக்கோயி லூரைப் பற்றியது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே 24—7—1980 அன்று தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் ஒரு வீட்டில் உரத்தில் கலப்படம் செய்யும் தொழிற்சாலை நடத்தி வந்தது உண்மையா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். அது சம்பந்தமாக தேவையான விசாரணை நடத்தப்பட்டதா? மேலும் அதுபற்றி தகவல் இருந்தால் அமைச் சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 15—7—1980 அன்று 168 உர மூட்டைகளை திரு. லட்சுமி நாராயண செட்டியார் என்பவர் அனுமதிக்காத இடத்தில் வைத்திருந்ததைக் கைப்பற்றினார்கள். ஆனால், உரக் கலப்படம் செய்ததை நிரூபிக்க முடியவில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்படம் என்பது மிகப் பெரிய சமூக விரோதக் குற்றமாகும். சட்டத்தைப் பயன்படுத்தி, இந்த சமூகத்தைக் கேவலப்படுத்துகின்றவர்கள் மீது மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கொடுக்க அரசு முயற்சிக்குமா ? அல்லது குறைந்த பட்சம் உரிமங்களைக் கொடுக்காமல் அல்லது மானியம், உதவித் தொகை போன்றவைகளைக் கொடுக்காமலாவது இருக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை.

பிளவக்கல் அணைப் பகுதியில் விதைப் பண்ணை.

*வினா எண். 310.—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணைக் கட்டுப் பகுதியில் உள்ள 600 ஏக்கர் புல்வெளிக் காட்டில் அரசு விதைப் பண்ணை துவக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையில், இல்லை என்று சொல்லி விட்டார்கள். அங்கே மண்வளம் அதிகமாக இருக்கிறது. மற்றும், பக்கத்தில் பிளவுக்கால் திட்டம் இருப்பதால், தண்ணீர் வசதியும் இருக்கிறது. கிணறுகள் வெட்டினால், தண்ணீர் வரும். அப்படியிருக்க செழிப்பான மேற்கு மலையடிவாரமாகவும் இருப்பதால், அதிகாரிகள் ஆய்வு நடத்தி இல்லையென்று சொல்லி விட்டார்களா? உண்மையிலேயே ஆய்வு நடத்தினார்களா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதைப் பற்றி முழுமையான ஆய்வு செய்யப்பட்டது. நிலங்கள் முழுவதும் வனத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் ஆகும். அவற்றில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் ஈக்குலிப்டஸ் மரங்கள்